ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த

# ॥ பந்நிருநாமம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ॥ பந்நிருநாமம் ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

பன்னிரு நாமம் திருவத்தியூர்ப் பரன் பாதம் என்று⋆
நன்னிற நாமம் படை திக்கி யாவையும் நாம் அறியத்⋆
தென்னந் தமிழ்த் தொடைச் சீரார் கலித்துறை ஓதி ஈந்தான்⋆
மின்னுறு நூல் அமர் வேங்கடநாதன் நம் தேசிகனே

கார் கொண்ட மேனியன் பாதாம் புயத்தைக் கருத்திருத்தி⋆
ஏர் கொண்ட கீர்த்தி இராமாநுசன் தன் இணையடி சேர்⋆
சீர் கொண்ட தூப்புல் திருவேங்கடாரியன் சீர் மொழியை⋆
ஆர் கொண்டு போற்றினும் அம்மால் பதத்தை அடைவிக்குமே

‡கேசவனாய் நின்று⋆ கீழைத் திசையிலும் நெற்றியிலும்⋆
தேசுடை ஆழிகள் நான்குடன்⋆ செம் பசும் பொன் மலை போல்⋆
வாசி மிகுத்தெனை⋆ மங்காமல் காக்கும் மறை அதனால்⋆
ஆசை மிகுத்த⋆ அயன் மக வேதியில் அற்புதனே (1)

நாரணனாய்⋆ நல் வலம் புரி நாலும் உகந்தெடுத்தும்⋆
ஊரணி மேகம் எனவே⋆ உதரமும் மேற்கு நின்றும்⋆
ஆரண நூல் தந்தருளால்⋆ அடைக்கலம் கொண்டருளும்⋆
வாரண வெற்பில்⋆ மழை முகில் போல் நின்ற மாயவனே (2)

மாதவ நாமமும்⋆ வான் கதை நான்கு மணி நிறமும்⋆
ஓதும் முறைப்படி ஏந்தி⋆ உரத்திலும் மேலு நல்கிப்⋆
போதலர் மாதுடன்⋆ புந்தியில் அன்பால் புகுந்தளிக்கும்⋆
தூதனும் நாதனுமாய⋆ தொல் அத்திகிரிச் சுடரே (3)

www.prapatti.com

கோவிந்தன் என்றும் குளிர் மதி ஆகிக்⋆ கொடியவரை⋆
    ஏவும் தனுக்களுடன்⋆ தெற்கிலும் உட்கழுத்து நின்று⋆
மேவும் திருவருளால்⋆ வினை தீர்த்தென்னை ஆண்டருளும்⋆
    பூவன் தொழ⋆ அத்தி மா மலை மேல் நின்ற புண்ணியனே (4)

விட்டு வல வயிற்றின் கண்⋆ வடக்கும் விடாது நின்று⋆
    மட்டவிழ் தாமரைத் தாது⋆ நிறங்கொண்ட மேனியனாய்த்⋆
தொட்ட கலப்பைகள்⋆ ஈர் இரண்டாலும் துயர் அறுக்கும்⋆
    கட்டெழில் சோலைக்⋆ கரிகிரி மேல் நின்ற கற்பகமே (5)

மதுசூதனன் என் வலப்புயம்⋆ தென் கிழக்கென்றிவற்றில்⋆
    பதியாய் இருந்து⋆ பொன் மாதுறை பங்கய வண்ணனுமாய்⋆
முது மா வினைகள் அறுக்கும்⋆ முயலங்கள் ஈர் இரண்டால்⋆
    மதுவார் இளம் பொழில்⋆ வாரண வெற்பின் மழை முகிலே (6)

திருவிக்கிரமன் திகழ் தீ நிறத்தன்⋆ தெளிவுடை வாள்⋆
    உருவிக் கரங்களில்⋆ ஈர் இரண்டேந்தி வலக் கழுத்தும்⋆
செரு விக்கிரமத்தரக்கர் திக்கும்⋆ சிறந்தாளும் இறை⋆
    மருவிக் கரிகிரி மேல்⋆ வரம் தந்திடும் மன்னவனே (7)

வாமனன் என் தன் வாமோதரமும்⋆ வாயுவின் திசையும்⋆
    தாமம் அடைந்து⋆ தருண அருக்க நிறத்தனுமாய்ச்⋆
சேமமரக்கலம்⋆ செம் பவி ஈர் இரண்டால் திகழும்⋆
    நாமங்கை மேவிய⋆ நான் முகன் வேதியில் நம் பரனே (8)

சீரார் சிரீதரனாய்ச்⋆ சிவன் திக்கும் இடப் புயமும்⋆
    ஏரார் இடங்கொண்டு⋆ இலங்கு வெண் தாமரை மேனியனாய்ப்⋆
பாராய பட்டயம்⋆ ஈர் இரண்டாலும் பயம் அறுக்கும்⋆
    ஆராவமுது⋆ அத்தி மா மலை மேல் நின்ற அச்சுதனே (9)

என் இருடி கேசன் இறை கீழ்⋆ இடக் கழுத்தென்றிவற்றில்⋆
    நன்னிலை மின் உருவாய்⋆ நாலு முற்கரம் கொண்டளிக்கும்⋆
பொன் அகில் சேர்ந்தலைக்கும்⋆ புனல் வேகை வட கரையில்⋆
    தென்னன் உகந்து தொழும்⋆ தேன வேதியர் தெய்வம் ஒன்றே (10)

எம் பற்பநாபனும்⋆ என் பின் மனம் பற்றி மன்னி நின்று⋆
வெம் பொன் கதிரவன் ஆயிரம்⋆ மேவிய மெய் உருவாய்⋆
அம் பொன் கரங்களில்⋆ ஐம் படை கொண்டஞ்சல் என்றளிக்கும்⋆
செம் பொன் திரு மதிள் சூழ்⋆ சிந்துராசலச் சேவகனே (11)

‡தாமோதரன் என் தன் தாமங்கள்⋆ நாலு கரங்களில் கொண்டு⋆
ஆமோ தரம் என⋆ ஆகத்தின் உட்புறம் பின் கழுத்தும்⋆
தாம் ஓர் இளம் கதிரோன் என⋆ என்னுள் இருள் அறுக்கும்⋆
மா மோக மாற்றும்⋆ மதிள் அத்தியூரின் மரகதமே (12)

‡கற்றுத் திரியும் கலைகளை வெல்லும்⋆ கருத்தில் வைத்துப்⋆
பத்திக்குறு துணை⋆ பன்னிரு நாமம் பயில்பவர்க்கு⋆
முத்திக்கு மூலம் எனவே மொழிந்த⋆ இம்மூன்று நான்கும்⋆
தித்திக்கும் எங்கள்⋆ திருவத்தியூரரைச் சேர்பவர்க்கே (13)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com